GCG2-1-TA

# சீஷராக்க தைரியப்படுங்கள் : விசுவாசிகளை குருத்துவத்தில் நடத்திட செயல்முறை படிகள் - நிகழ்ச்சி 1

**அறிவிப்பாளர்:** எது முக்கியமான காரியமென்று நினைக்கிறீர்கள், முதலாவதாக இயேசு பின்வரும் பகுதிகளான அமெரிக்கா கேனடா மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்கு பகுதி ஆப்ரிக்கா, ஆசியா பிலிப்பைன்ஸ் ஆஸ்திரேலியா போன்ற இடங்களில் உள்ள கிறிஸ்தவர்கள் என்ன செய்ய வேண்டும் என்கிறார். இயேசு கூறினார், “நீங்கள் போய் சீஷர்களை ஏற்படுத்துங்கள்.” சீஷர் என்றால் என்ன? எப்படி சீஷர்களை ஏற்படுத்த முடியும்? இன்றைக்கு எனது விருந்தினரான ராபி கேலட்டி அதை நமக்கு சொல்ல இருக்கிறார், இவர் 3,200 அங்கத்தினர்களை உடைய சபையின் மேய்ப்பராக இருக்கிறார், நான்கு காலை ஆராதனைகள் நடக்கும், இருந்தாலும் தனிப்பட்ட நபராக வருடந்தோறும் ஏழு முதல் எட்டு பேரை சீஷர்களாக உருவாக்குகிறார். அவர்கள், மாறுத்தரமாக, மற்றவர்களை சீஷர்களாக உருவாக்குகிறார்கள். சரி, இதுவரை நீங்கள் யாரையும் சீஷராக உருவாக்காதிருந்தால், இதை செயல்படுத்துவது சாத்தியம் தானா? நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய செயல்முறை காரியங்கள் என்ன? இன்றைக்கு இந்த ஜான் அன்கெர்பெர்க் சிறப்பு தொகுப்பில் அதை தெரிந்துகொள்ள இருக்கிறோம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இன்றைக்கு உங்களுக்காக சிறப்பான ஒன்று காத்திருக்கிறது. உங்களுக்கே தெரியும், நாம் கிட்டத்தட்ட ஏழு பில்லியன் மக்கள் நிறைந்த உலகத்தில் வாழ்ந்துகொண்டு இருக்கிறோம்; இவர்களில் நான்றரை பில்லியன் மக்கள் கர்த்தராகிய இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுகொள்ளாத ஜனங்களாக இருக்கின்றனர். இந்த ஜனங்களை எப்படி ஆதாயப்படுத்துவது என்று இயேசுவே ஒரு திட்டத்தை கொடுத்திருக்கிறார். அவர் நமக்கு பெரிதான கட்டளையை அளித்திருக்கிறார்,, இந்த உலகத்திற்குள் சென்று சீஷர்களை ஏற்படுத்த வேண்டும். நாம் எதை பற்றி பேசிக்கொண்டு இருக்கிறோம், அதை செயல்படுத்துவது எப்படி? நீங்க அதை எப்படி செய்யமுடியும்? நம்முடைய தேசத்தில் இருக்கிற பிரசித்திபெற்ற போதகர்களில் ஒருவரை அழைத்திருக்கிறேன், ராபி கேலட்டி, இவர் தம்முடைய சொந்த அனுபவத்தில் இருந்து எப்படி சீஷர்களை உருவாக்க முடியும் என்பதை நம்மோடு பகிர்ந்துகொள்ள இருக்கிறார். இவருக்கு சுமார் 3,200 அங்கத்தினர்களை உடைய சபை இருக்கிறது, ஞாயிற்று கிழமைகளில் நான்கு ஆராதனைகள் நடக்கிறது, இருந்தாலும் சீஷர்களை ஏற்படுத்துவதை முதன்மையான காரியமாக கொண்டிருக்கிறார். மேலும் ஏழு ஆண்டு காலங்களுக்குள் இவர் சுமார் 30 பேரை சீஷர்களாக ஏற்படுத்தி இருக்கிறார். இவர்கள் இவரைபிரதிபளிக்கும் விதமாக வெளியிடங்களுக்கு போய் சீஷர்களை உருவாக்கி வருகிறார்கள். சரி, ராபி, இதை ஜனங்கள் தங்களுக்கு உரியதாக பார்க்கும்படி விரும்புகிறேன். ஏழு வருடங்களுக்கு முன்பு உங்களுக்கு ஆண்டவரையே தெரியாத நிலையில் இருந்தீர்கள்.

நீங்கள் பயமுறுத்தும் தோற்றம்  உடையவராக நியூ ஆர்லியன்சின் வீதிகளில் நடத்து கொண்டிருந்தீர்கள். உண்மையில் நீங்க நியூ ஆர்லியன்சில் ஒரு பாரில் பவுன்சராக இருந்தீர்கள், 290, 6’6’’, சரியா? உங்களோடு ஓட்டுனர் உரிமத்தை

நான் பார்த்திருக்கிறேன், அப்ப உங்களை பார்த்த ஜனங்கள், உங்களை பார்த்து ரொம்ப பயப்படுகிறவர்களாக இருந்தார்கள்.

ஓகே. இப்ப நீங்க ரொம்ப வித்தியாசமா இருக்கீங்க. இயேசு உங்கள் வாழ்வை முற்றிலுமாக மாற்றிவிட்டார். நீங்க எப்படி இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுகொண்டீங்கன்னு எங்களுக்கு சொல்லுங்க, நீங்க மூழ்கியிருந்த பாவத்தில் இருந்து அவர் உங்களை எப்படி தூக்கி எடுத்தார். அதுமட்டுமில்லை, ஒரு உங்களோடு சேர்ந்து நடக்கவும் உங்களை சீஷராக உருவாக்கவும் வேண்டிய அவசியத்தை பற்றி சொல்லுங்க, அது ஏன் அவசியமாக இருக்கிறது. நீங்க எப்படி மற்றவர்களை சீஷராக ஏற்படுத்துகிறீர்கள் என்றும் சொல்லுங்க. உங்க அனுபவத்தை பகிர்ந்திடுங்கள்.

**ராபி கேலட்டி:** சரி, நான் ஒரு பாரம்பரிய குடும்பத்தில் வளர்க்கப்பட்டேன், என்னுடைய பெற்றோர் ரோமன் கத்தோலிக்கர்கள் வாரம் தவறாமல் சபைக்கு போவோம். ஆனா ஒரு விஷயம் என்னன்னா, நா பாரம்பரிய மார்க்கத்தில், இருந்ததால தேவனோடு ஒரு ஐக்கியம் இல்லாம இருந்தேன்.

நா ஹேட்டிஸ்பர்க் ல கூடை பந்து விளையாடுவதற்காக நான் கல்லூரிக்கு சென்றேன், மிச்சிசிபி. எல்லா இடங்களிலும் எனக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்கும்படியாக, ஒரு கிறிஸ்தவ கல்லூரிக்கு சென்றேன், தெற்கு பாப்டிஸ்ட் கிறிஸ்தவ கல்லூரி. உங்களுக்கே தெரியும் கேம்பசோட எல்லா சுவிசேஷ வகுப்புகளிலும் நான் தான் முக்கிய டார்கட்டாக காணப்பட்டேன். அவங்க என்னை துரத்தீட்டே இருப்பாங்க, அதாவது, “ராபி பின்னடைந்திருக்கான், கிறிஸ்துவை பற்றி ராபிக்கு சொல்லப்போகிறோம் என்று வருவார்கள்.” 1995ல், ஒருவர் என்னிடம் வந்து என்னை பார்த்து, “ராபி, நீ எப்போதாவது ஒரு கட்டுக்குள் பிடிபட்டுவிட்டால், நீ எப்போதாவது ஒரு பிரச்சனையில் சிக்கிகொண்டாள், நீ

தேவனை நோக்கி முறையிட முடியும், உன் பாவங்களில் இருந்து மனந்திரும்பி, நீ கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மேல் உன் விசுவாசத்தை வைக்க முடியும் என்றார்." அதற்கு நான் உண்மையில், நன்றி சொல்றேன், பட் நோ தேங்க்ஸ்." அதாவது, அந்த நேரத்தில் சகோதரர்கள் வீடுகளுக்கு போவதில் ஆர்வமிருந்தது, பார்டிகளில் ஆர்வம் இருந்தது; பெண்கள் மீது ஆர்வம் இருந்தது; இந்த பட்டியலில் இயேசு கடைசி இடத்தில் இருந்தார். 1998ல கல்லூரியில் இருந்து வெளியேறினேன். என்னோட சொந்த கணினி நிறுவனத்தை துவங்கினேன். உலகத்திலேயே வெற்றியுள்ளவனாக இருக்க விரும்பினேன். உலகத்திலேயே மிகவும் பிரபலமா பணக்காரனா இருக்க நினைச்சேன். 1999ல வேலை முடித்து நான் வீட்டிற்கு திரும்பி வந்துட்டு இருக்கும்போது, ஜான், ஒரு பதினெட்டு சர்க்கர வண்டி – அது நடக்கனுன்னு நினைக்கவே இல்லை, அது வருவதை நான் பார்க்கவில்லை – டிராபிக்ல இரண்டு லேனுக்கு அந்தபக்கம் இருந்து திடீருன்னு வந்தது என்னை மணிக்கு 65 மைல் வேகத்தில் தூக்கி வீசியது.

என்னோட இருக்கை ஓரம் வரைக்கும் உடைந்துவிட்டது, என்னோட சீட் பெல்ட் சரியா பொருந்தியிருந்தது. நா டாக்டர்களிடம் போனேன் அவங்க சொன்னாங்க, "இந்த விபத்துல நீங்க உயிர் பிழைத்தது ஆச்சரியமான விஷயம் என்றனர்." அப்ப எனக்கு இருபத்திரண்டு வயது, என்னை வீட்டிலிருந்தே மருந்து எடுத்துக்க சொன்னாங்க ஆக்சிகான்டின், வேலியம், சோமா, மற்றும் பெர்கோசெட். இப்ப, என்ன நடந்திருக்குன்னு நீங்களே கற்பனை செய்திடுங்கள். வலிக்காக ஆறு மணிநேரத்திற்கு ஒருமுறை நான் மாத்திரைகளை சாப்பிட துவங்கினேன், கிட்டத்தட்ட மூன்று மாதங்களில், அந்த மருந்து மாத்திரைகளுக்கு நான் அடிமையாக மாறிவிட்டேன். இந்த அடக்க முடியாத ஆசை எனக்கு

உச்சகட்டத்தில் இருந்தது. பணம் சம்பாதிக்கும் ஆசை இல்லை, வெற்றி பேரனுன்ற எண்ணம் இல்லை, எப்போதும் போதையில் இருக்க விரும்பினேன்.

உங்களுக்கே இது புரியுன்னு நினைக்கிறேன், என்னை உச்சகட்டத்தில் நிறுத்தும் போதை எதுலையுமே இல்லை, நியூ ஆர்லேன்ஸ்ல ஒருத்தர்  என்னிடம் வந்து பேசினார் அவர் சொன்னார், “நீ ஏ ஹெராயின் மற்றும் கொகெய்ன எடுத்துக்க கூடாது? உனக்கு அது தெரு முனையில் கிடைக்கும்போது எதுக்காக மருந்துகடையின் மருந்துகளை பயன்படுத்தீட்டு இருக்கேன்?” ஒரு சில மாதங்களுக்குள்ள, நா ஹெராயினுக்கும் கொகேயினுக்கும் அடிமையாயிட்டேன். அப்பறமா நா நியூ ஆர்லேன்ஸ்ல போதை மருந்து விற்க ஆரம்பித்தேன், அதை தயாரித்து, எல்லா இடங்களுக்கும் விநியோகித்தேன் GHB ல இருந்து மாரிசுஆனா வரை, எக்ஸ்டசி மாத்திரைகள். இதை நா யாரையும் கவரும்படியாக சொல்லவில்லை இதை ஏன் சொல்கிறேன் என்றால், எப்படியிருந்த என்னை தேவன் இவ்வளவு தூரம் அழைத்துவந்திருக்கிறார் என்று சொல்லுகிறேன்.

அந்த மூன்றை வருட காலத்தில், அதாவது 2000 முதல் 2003 வரைக்கும், மதுபானதினாலும் மற்ற போதை பொருட்களினாலும் என்னுடைய எட்டு நண்பர்களை சாககொடுத்தேன். ஆறுபேர் சிறைக்கு சென்றனர். அந்த நாட்களில் தப்பி பிழைத்தது நான் ஒருவன்தான் என்று சொல்ல முடியும். நா 2 முறை மறுவாழ்வு மையத்தில் இருந்திருக்கிறேன், நா ஏ அங்க இரண்டு முறை போக வேண்டியிருந்தது என்றால்நா என்னுடைய சுயமாக முயற்சிக்க நினைத்தேன்,. என்னுடைய சொந்த பெலத்தில், என்னுடைய சொந்த வல்லமையில், சுயத்தில் மீண்டு வர முயன்றேன். ஒவ்வொரு முறையும் என்னை நான் சார்ந்துக்கொள்ள முயலும்போது, தோற்று போகிறேன் என்பதை உணர்ந்தேன். இறுதியாக 2002 ல், நவம்பர் 12, ஏழரை ஆண்டுகளுக்கு முன்பு, நான் என் முழங்காலை முடக்கினேன். சபையில் அப்படி நடக்கவில்லை, ஒரு எழுப்புதல் கூட்டத்தில் நடக்கவில்லை.

உண்மையில், அந்த நாட்களில் நான் சபை பக்கமே போகல. நான்தேவனை நோக்கி கதற ஆரம்பித்தேன், நா சொன்னேன், தேவனே, நீர் உண்மையானவர் என்றால், நீர் இந்த பிரபஞ்சத்தின் தேவனாக இருந்தால், நான் இருக்கும் இந்த இக்கட்டான சூழ்நிலையில் இருந்து என்னை இரட்சியும்...” அந்த நேரத்துல தான், ஜான், நா நூற்றி என்பது டாலர் ஹெராயின் மற்றும் கொகேயினுக்கு அடிமையாக இருந்தேன். அதற்கு என்ன அர்த்தம்னா, நா ஒவ்வொரு நாள் எழும்பும்போது, அந்த நாளுக்கு, எனக்கு அது ரொம்ப அவசியமா இருந்துது. நா தேவனை நோக்கி கதறினேன், நான் சொன்னே, “நீர் என்னை இந்த அடிமைத்தனத்தில் இருந்து விடுவித்தால், என்னுடைய வாழ்நாள் முழுவதையும் உமக்காக அர்ப்பணித்து நடக்கிறேன் என்றேன்.”

**அன்கெர்பெர்க்:** ஆமா, அந்த நேரத்துல, நீங்க எல்லாத்தையும் இழந்துட்டீங்க. உங்க வீட்டை இழந்துட்டீங்க, உங்களுடைய எல்லாத்தையும் நீங்க இழந்துட்டீங்க, நீங்க உங்க அப்பாகிட்ட இருந்து பணத்தையும் திருடினீங்க.

**ராபி கேலட்டி:** ஆமா, நா ரொம்ப மோசமானவனாக மாறீட்டேன், எனக்காக இருந்த மக்கள் எல்லாரும், என்னை அதிகமா ஆதரித்த ஆதவராக இருந்த எல்லாரும், என்னுடைய பெற்றோர், எங்க அப்பாகிட்ட இருந்து 15,000 டாலரை நா திருடினேன். அவருடைய  பர்ஸ எடுத்து அவருக்கு தெரியாம அவரோட கிரெடிட் கார்ட் நம்பர மனப்பாடம் செய்து, சொந்த பெற்றோரிடமே நா திருடினேன். என்னை வீட்டை விட்டு வெளிய அனுப்பீட்டாங்க. அந்த போன் கால என்னால மறக்கவே முடியாது. என்னோட அம்மா போன் பண்ணி சொன்னாங்க, “ராபி, ஆ, நீ ஒரு விஷயத்தை தெரிஞ்சுக்க விரும்புகிறோம், நீ செய்ததை நாங்க கண்டுபிடிச்சுட்டோம். உங்க அப்பா கோபமா இருக்காரு, எனக்கு ஏமாற்றமா இருக்குது. நீ மறுபடியும் திரும்ப வீட்டுக்கு வந்துடாதேன்னு சொன்னாங்க.”

இருக்கட்டும், கதைய சுருக்கமா சொல்றேன், என்னுடைய வாழ்க்கையை நா கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு கொடுத்தேன், இருபத்தி நான்கு மணிநேரத்தையும் இயேசுவோடு செலவிட்டேன். அடுத்த நாள், என்னோட அப்பாகிட்ட போய் சொன்னேன், டேட், தேவன் என்னை பிரசங்கிக்கும்படி அழைக்கிறார், நா ஊழியம் செய்யபோகிறேன்." என்னோட அப்பா என்னை மேலயும் கீழையும் பார்த்து கேட்டார், "மகனே, நீ பாதிரியாரா இருந்தா எப்படி ஒருநாள் உன்னால கல்யாணம் பண்ணிக்க முடியும்? நா சொன்னேன், இல்ல, பாதிரியார் இல்ல, பா. தேவன் என்னுடைய வாழ்வில் கிரியை செய்ய துவங்கினார்.

ஆனா அடுத்த ஆறு மாதங்களில் என்னுடைய வாழ்வில் நடந்த காரியங்கள் பெரும்பாலான புதிய விசுவாசிகளின் வாழ்விலும் நடந்திருக்கும். நா அப்படின்னுதான் நினைக்கிறேன். வேதத்தை எப்படி வாசிப்பது என்று எனக்கு தெரியவில்லை, ஒவ்வொரு நாளும் வேதத்தை வாசிக்கனுன்னு கூட தெரியாது, எப்படி வசனத்தை மனப்பாடம் செய்வதென்று தெரியாது, எப்படி ஜெபிப்பது என்றும் தெரியாது. சில பாரம்பரிய ஜெபங்களை எனக்கு ஆரம்பத்தில் இருந்து தெரியும், ஆனா தேவன் என்னோடு பேசுவதை கேட்கிற அளவிற்கு ஒரு உறவை வளர்த்து கொள்வது எப்படி என்று எனக்கு தெரியவில்லை. அதனால கொஞ்ச நாள் எனக்கு ஒன்னுமே புரியல. ஒருமுறை சபையில் ஒருவர் என்னிடம் வந்து சொன்னார், "ராபி, நீ தீமோத்தேயு மாதிரி இருக்க. உனக்கு ஒரு பவுல் வேண்டும், அப்போஸ்தலனாகிய பவுல் போல ஒருவர்." பவுலை பற்றி நான் வேதாகமத்தின் மூலம் கேள்வி பட்டிருக்கிறேன், அதனால அதை நான் வாசிக்க துவங்கினேன். அதிலிருந்து, நா ஜெபிக்க துவங்கினேன். ஒரு சில மாதங்களாக ஜெபித்துகொண்டிருன்தேன். ஒருநாள் சபையில் ஒரு நபர் அவர் பெயர் டேவிட் பிளாட், அவர் இப்போது பிர்மிங்கம்ல பாஸ்டராக இருக்கிறார், அவர்

என்னிடத்தில் வந்து கேட்டார், “ராபி, நீ வாரத்தில் ஒருநாள் நடக்கிற வேதபாட வகுப்பிற்கு வர விரும்புரியா, அங்க ஜெபிக்கவும் வசனத்தை மனப்பாடமும் பண்ணலாம்?” அதற்கு நான், டேவிட், நிச்சயமா வர விரும்புகிறேன் என்றேன்.” அதற்கு அவர், “அதை பற்றி நீ ஜெபிக்கலாமே என்றார். அதற்கு நா, “ஏற்கனவே ஜெபித்திட்டு இருக்கேன். எப்ப நாம சந்திக்கலாம் என்றேன்.” அதிலிருந்து வாராவாரம் சந்திக்க துவங்கினோம்.

மேலும், ஜான், அடுத்த ஆறு மாசம் அவர் தன்னையே எனக்குள்ள ஊற்றிவிட்டார், எனக்குள் விதைத்தார். அதற்கு பிறகு அடுத்த வருடத்தின் துவக்கத்தில், நா ஒருவரை சந்தித்தேன் அவரோட பெயர்  டிம் லாப்லூர். டிம் நிக்கோலாஸ் மாநில பல்கலைகழக வளாகத்தில் பல ஆண்டுகளாக இருக்கிறார், அவர் கடந்த இருபது ஆண்டுகளில் வளாகத்தில் பலதரப்பட்ட நபர்களை சீஷர்களாக்கி வளர்ச்சியடைய செய்திருக்கிறார். அவர் என்னை குலோரிடாவிற்கு அழைத்துவந்தார், நியூ மெக்சிகோ, ஒரு கேம்பிற்காக. மேலும் மூன்று மாதங்களுக்கு, ஒவ்வொரு நாளும், காலையும் மாலையும், அவர் தன்னையே எனக்குள் ஊற்றினார். அதனால, இப்ப ஏழரை ஆண்டுகளுக்கு பிற்பாடு இப்படி இருக்கேன். சீஷத்துவத்தை குறித்து நா அதிக ஆர்வமாக இருப்பதற்கு காரணம் என்னவென்றால் நானும் சீஷத்துவத்தின் உருவாக்கமாக இருக்கிறேன். நா யார் என்பதை குறிக்கிறது, நா இங்கதான் இருக்கேன், ஏன்னா என்னுடைய வாழ்வில் நிறைய பேர் தாக்கத்தை உண்டாக்கி இருக்கிறார்கள்.

**அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். ஒரு வியப்பான அனுபவத்தை பெற்றிருக்கிறீர்கள், இங்க இருக்கபோகிற மீதமுள்ள நேரத்தில் ஒவ்வொன்றாக நாம் பார்க்க இருக்கிறோம். ஆனா என்னுடைய விருப்பம், வீட்டிலிருந்து கேட்க்கிற நேயர்களுக்கு இந்த நிகழ்ச்சி ஒரு நடைமுறை காரியமாக இருக்கவேண்டும் என

விரும்புகிறேன், சரியா? நேயர்களுக்கு பிரதான கட்டளையை பற்றி தெரியும். அதாவது, இயேசு ஒரு வியக்கத்தக்க அறிக்கையை கூறியிருக்கிறார், "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது." இதனால் அவர் தம்மை தேவன் என்று சொல்லுகிறார் என்பது விளங்குகிறது, சரியா? அவர்தான் வானத்திற்கு அதிகாரி, பூமிக்கும் அதிலுள்ள யாவற்றிற்கும் அதிகாரி அவர்தான். அதன் அடிப்படையில், அவர் சொல்கிறார், "போய், சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்." ஆல்ரைட், ஜனங்களுக்கு அது புரியும்.

ஆனா நிறைய சபை அங்கத்தினர்கள் – நானும் அவர்களில் ஒருவன் தான் –

அவர்களுக்கு இந்த விஷயத்தில் செயல்பட எந்தவித குறிக்கோலும் கிடையாது. நான் ஒரு கட்டத்திற்கு முடிவிற்கு வந்தேன், தேவனே, நா முயற்சிக்கிறேன்." இது இரட்சிக்கபடுவதை விட மிக கடினமாக இருக்கிறது, இல்லையா? அதாவது, இரட்சிக்கபடுவது என்று சொன்னால் நம்முடைய கரங்களை உயர்த்தி தேவனிடம், "இயேசுவே, உம்முடைய இலவச ஈவு எனக்கு தேவை என்னுடைய பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும், உம்மோடு எனக்கு நெருங்கிய உறவு உண்டாகவேண்டும் என்பதாகும்." ஆனா எனக்கு இன்னொருவரிடம் ஒரு விஷயத்தை சொல்வது என்றால், என்னுடைய பெயர் கேட்டு போகும் என்ற எண்ணம் தான் வந்திடும். தேவனிடம் நான் சொன்னேன், "சரி, இதை நான் செய்கிறேன், ஆனா ஒரு விஷயத்தை சொல்றேன், ஆண்டவரே, நா ஏடாகோடமா பேசிடுவேன். எனக்கு சில பதில்கள் தெரியாது, நா பிரசங்கியார் இல்ல, நா சபைகளில் பேசுகிறவன் இல்லை, நா ஒரு ஞாயிறுபள்ளி ஆசிரியர் இல்ல, இதை எப்படி செய்யணுன்னு எனக்கு தேராது. எதுவும் சரியா இருக்க போறது கிடையாது, ஆனா நீங்க நா இதை செய்யணுன்னு நினைக்கிறதால, இதை செய்ய முயற்சிக்கிறேன்." அப்படிதா துவங்கினேன் அதிலிருந்து வாழ்நாள் முழுவதும்,

தொலைக்காட்சி நிகழ்சிகளில் தோன்றிய இந்த 30 ஆண்டுகளையும் சேர்த்து, தேவன் என்னை பயன்படுத்த முடியுமா என்ற எண்ணத்திலும் சரியாயிருக்காது என்ற தீர்மானத்திலும்  இருந்து நான் முற்றிலுமாக வெளியேறிவிட்டேன்.

சரியா? நா அந்த தீர்மானம் எடுத்தேன். இப்ப, தங்கள் இருக்கையை விட்டு எழுது மற்றொரு நபருக்கு ஆசிரியராகவோ குருத்துவராகவோ இருந்து செயல்படும் படியாக மக்களை ஊக்குவிக்கும் விதமாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள், அவர்களை சீஷராக்கி ஊக்குவித்திட உற்சாகமளித்திடுவீர்களா?

**ராபி கேலட்டி:** ஆமா, இது மிகப்பெரிய கேள்வி. சீஷர்களை ஏற்படுத்த வேண்டும் என்ற அவசியத்தை பெரும்பாலானோர்  அறிந்திருக்கிறார்கள். மத்தேயுவில், நீங்கள் சொன்னது போல, மத்தேயு 28:19ல், இயேசு கூறுகிறார், "புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்." அது ஒரு கட்டளை, நாம் போகும்படியாக கட்டளை கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனா இரண்டாவதாக, அந்த கட்டளையின் முடிவில், இயேசு ஒரு வாக்குத்தத்தம் அளிக்கிறார். அவர் சொல்கிறார், "கேளுங்க, நீங்க சீஷர்களை உருவாக்கும்போது, உலகத்தின் முடிவுபரியந்தம் நான் உங்களுடனே கூட இருப்பேன்."இதுல சுவாரஸ்யமான விஷயம் என்னன்னா, நீங்க சீஷத்துவம் என்ற ஆரவை ஏற்படுத்தும் ஓய்து, அதில் நீங்களும் மற்ற இரண்டு அல்லது மூன்று பேர் மட்டும் இல்லாமல், நீங்களும் இரண்டு மூன்று நபர்களும் தேவனும் இருக்கிறீர்கள். தேவனுடைய பிரசன்னம் அங்கே இருக்கிறது அவர் உங்களுடைய இந்த பாதையில் உங்களை சந்தித்திடுவார்.

**அன்கெர்பெர்க்:** ஆமா, அதாவது, ஒரு விஷயத்தை நா ஜனங்களுக்கு சொல்ல விரும்புகிறேன், உண்மையாகவே இதெல்லாம் ஆரம்பமான போது எனக்கு

எதுவுமே தெரியல, எனக்குள்ள இவ்வளவு பிரச்சனைகள் இருந்தது, என்ன சொல்றதுன்னு தெரியல, எனக்கு ஒன்னுமே புரியல, அதாவது, ஜனங்க எங்கிட்ட என்ன கேட்ப்பாங்க நா அவங்களுக்கு என்ன பதில் சொல்ல போறேன். ஆனா செயல்பட துவங்கினேன். நா ஒவ்வொரு நபரையும் சந்திக்க துவங்கியபோது நாங்கள் சேர்ந்து வசனம் வாசிக்க துவங்கினோம் சேர்ந்து ஜெபித்தோம், அப்போதெல்லாம் பிரதான கட்டளைக்கு பின்னால் இருக்கும் வாக்குத்தத்தம் எனக்கு தெரியாது, அவர், "சதாகாலமும் நான் உங்களோடு இருக்கிறேன் என்றாரே." உங்களுடைய கிறிஸ்தவ வாழ்வில் இயேசு வெளிப்பட விரும்புகிறீர்களா, அநேகர் சொல்கிற காரியம் என்னவென்றால் அவர்களுடைய கிறிஸ்தவ வாழ்கை குட்டையை போலவும் பின்னோக்கி செல்வதுமாக இருக்கிறது என்கின்றனர், உண்மையான உறவு அவர்களுக்கு இல்லை, உண்மையாக இல்லை.மெய்யான உறவை விரும்பினால், ஒருவரை சந்திக்க தீர்மானித்து அவர்களை உற்சாகப்படுத்திடுங்கள். நா பார்த்த காரியம், நான் ஜெபிப்பது ஒருவிதமாக இருந்தாலும், என்னுடைய நண்பன் நண்பர்கள் ஜெபிப்பதை கேட்கும்போது, எனக்கு ஒரு மாற்றத்தை உண்டாக்கியது.

**ராபி கேலட்டி:** ஆமா.

**அன்கெர்பெர்க்:** தேவன் என்னோடு பேசினார். நாங்க வசனங்களை வாசித்த போது, அவங்க வசனங்களை வாசித்த பொழுது சொன்னாங்க, சரி, நாம இதை நம்முடைய வாழ்வில் செயல்படுத்த போகிறோம்." அது எனக்குள்ள ஒரு அசைவை உண்டாக்கியது. அங்க பரிசுத்த ஆவியானவர் இருந்தார், தேவன் இருந்தார், அவர்கள் இந்த கூட்டங்களில் வெளிப்பட்டு நான் ஒருவரோடு பகிர்ந்துகொள்ள துவங்கும்போது எனக்கு புதிய விஷயங்களை கற்றுத்தந்தனர். அதுல நடக்கும் காரியங்களில் இதுவும் ஒன்று. நான் கற்றுக்கொண்ட இன்னொரு விஷயம்

என்னவென்றால் நான் எதிர்பார்த்ததை விட அதிகமாக நான் உற்சாகப்படுத்தப்பட்டேன். தேவனால் பதில் பெறப்படும் ஜெபங்களின் யதார்த்த நிலை, அதை பற்றி நான் பேச இருக்கிறோம், அதில் முக்கியமான ஒன்று ஜெபம். நாங்கள் ஒன்றாக சேர்ந்து ஜெபிக்க துவங்கினோம், இயேசு சொல்லியிருக்கிறார், "எங்கே இரண்டு மூன்று பேர் என் நாமத்தினால்   கூடினாலும் அவர்கள் மத்தியில் நான் இருக்கிறேன்." அது, சத்தியம் என்று என்னால் சொல்ல முடியும், தேவன் ஜெபங்களுக்கு பதில் கொடுக்கிறார். ஜனங்கள் என்னிடத்தில் கேட்டிருக்கிறார்கள் எனக்கு நினைவிருக்கிறது, "கவனிங்க, என்னோட அம்மா நேற்று இரவு தற்கொலை செய்துகொள்ள முயன்றார்கள். நாம ஜெபிக்கிற நேரத்தில் தேவன் அவர்களோடு இடைபடுவார் என்று உங்களால உறுதியாக சொல்ல முடியுமா? அதை பற்றி நான் யோசித்து பார்க்கணும். இந்த மாதிரியான பிரச்சனைகளை கையாளும் அளவிற்கு தேவன் பெரியவரா?

உங்களுக்கு தெரியுமா, "என்னை நோக்கி கூப்பிடு நான் உனக்கு உத்தரவு அருளுவேன், நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன் என்றார்." எரேமியா 33. "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும், தேடுங்க கண்டடைவீர்கள், தட்டுங்கள் உங்களுக்கு திறக்கப்படும்." இந்த வசனங்களை எல்லாம் எடுத்து பார்த்தேன், நா யோசித்தேன், "ஆண்டவரே, உண்மையாக நீங்கதா சொல்லியிருக்கீங்களா? என்னால நிச்சயமா சொல்லமுடியும், "நாம ஜெபிக்க போறோம், தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் நான் விசுவாசிக்கிறேன், ஆமா, அவர் இடைபடுவார். அவர் உதவிடுவார்." நா அப்படிப்பட்டவர்களை பார்த்திருக்கிறேன், நாங்க அவர்களுக்காக ஜெபித்த போது, அவங்க அம்மா இரட்சிக்கப்படறாங்க. அவங்க வீட்டுக்கு நாங்க நிறையஉயர்பள்ளி  மாணவர்கள் மற்றும் கல்லூரி மாணவர்களை கூட்டீட்டு போகும்போது அவங்க சந்தோஷமா, எங்களுக்காக சமைத்து

கொடுப்பார்கள். முழுமையான மாற்றம் அங்கு உண்டானது, உங்க வாழ்விலும் அப்படிதானே.

ஆனா ஒரு விஷயத்தை நான் புரிந்துகொள்ளவில்லை, அந்த வசனத்தை பார்த்து ஜெபிக்க துவங்கும்வரை அதை புரிந்துகொள்ளவில்லை. இப்ப நான் ஜனங்களை உற்சாகப்படுத்துகிறேன். இப்போது ஒரு இடைவேளை எடுத்துகொள்வோம், நாம திரும்ப வந்ததும் ஒருவரை எப்படி சீஷத்துவத்தில் நடத்துவது என்பதை பற்றி நாம் மேலும் சிலவிஷயங்களை பார்க்க இருக்கிறோம், எப்படி தேவன் இதில் இடைபடுகிறார், உங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கை எப்படி சுவாரஸ்யம் உள்ளதாக இருக்கும், உங்களால் அப்படி அதை மாற்றிக்கொள்ள முடியுமா. நாம திரும்ப வந்ததும், இதை பற்றி பார்க்க இருக்கிறோம், உங்களிடம் இருக்கும் நபரை, எப்படி நீங்கள் தேர்வு செய்கிறீர்கள், ராபி?

உங்ககிட்ட இருக்கிறவர்களை எப்படி தேர்வு செய்றீங்க ஒருவர் உங்ககிட்ட சொன்னாருல்ல, “ஹே, ராபி, இரண்டு பேரும் சந்தித்து தேவனுடைய காரியங்களை பேசுவதில் உங்களுக்கு ஆர்வம் இருக்கிறதா, ஒன்றாக சேர்ந்து வேதத்தை வாசித்து ஜெபிக்கலாமா? அதாவது, அந்த நபரை எப்படி தேர்வு செய்கிறீர்கள்? அடுத்து உங்களுடைய முதல் சந்திப்பு நடக்கிறது, அதுல என்ன பேசுவீங்க? எதிர்காலத்தில் நீங்க என்ன எதிர்பார்க்கிறீங்கன்னு எப்படி சுருக்கமா சொல்வீங்க, ஓகே? நாம திரும்ப வந்ததும் ஒரு நபரை எப்படி சீஷனாக உருவாக்குவது என்பதை குறித்த செயல்முறை காரியங்களை பற்றி பேச இருக்கிறோம். தொடர்ந்து இணைந்திருங்கள்.

*****

**அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. இயேசுவின் கட்டளைகளை குறித்து பேசிக்கொண்டு இருக்கிறோம், “உலகமெங்கும் போய் சகல ஜாதிகளையும்,

சீஷராக்குங்கள்." நீங்க ஒரு நண்பரை சந்திப்பதை பற்றி பேசிக்கொண்டு இருந்தோம், சபையில் இருக்கும் ஒருவரை நீங்கள் உற்சாகப்படுத்துகிறீர்கள், அயல் வீட்டு காரரை சந்திப்பதாகவும் இருக்கலாம். அதை எப்படி செய்கிறீர்கள், சரியா? உண்மையா இதை செய்தாகவேண்டும் என்று களத்தில் இறங்கினால், நீங்கள் செய்யவேண்டிய சில செயல்முறை காரியங்கள் என்னென்ன? நம்முடைய தேசத்தில் இருப்பவர்களில் பிரதிபெற்ற வேதாகம போதகர் நம்முடன் இருக்கிறார், ராபி கேலட்டி, இவர் இந்த காரியங்களை குறித்து நம்மோடு பகிர்ந்துகொண்டு இருக்கிறார். இதை எப்படி செயல்படுத்துகிறோம் என்பதை விளக்கிடும் சில உதாரணங்களையும் நாம் பார்த்து வருகிறோம். சரி, ராபி, ஒருமுறையை களத்தில் இறங்கி நீங்க தீர்மானித்தீர்கள், இயேசுவின் கட்டளைக்கு கீழ்படிய போகிறேன் என்றீர்கள், ஆனா என்ன செய்யணுன்னு உங்களுக்கு அப்ப தெரியாது. அதை பற்றி சொல்லுங்க: எப்படி ஆரம்பித்தீர்கள்? யாரை சந்திக்க வேண்டும் என்று உங்களுக்கு எப்படி தெரிந்தது? எப்படி ஒருவரை சீஷராக்கவும் ஊக்குவிக்கவும் தெரிந்துகொண்டீர்கள்?

**ராபி கேலட்டி:** ஆமா. அது சுவாரஸ்யமானது. உதாரணத்திற்கு இயேசுவை தான் பார்க்கணும், நிச்சயமா. இயேசு ஜெபத்தில் இருந்து துவங்குகிறார். இயேசு பன்னிரண்டு மனிதர்களை தெரிந்துகொள்வதற்கு obviously முன்பு ஒரு மலையின் மேல் ஏறிபோய் ஜெபிக்கிறார் யார் என்னை பின்பற்றனும், எனக்கு ஊழியம் செய்யணும், என்னோடு தங்கியிருக்கணும், என்று ஜெபித்தார். அப்படின்னா, சீஷத்துவத்தில் ஆர்வமாக இருக்கிற ஒருவர், களத்தில் இறங்க தீர்மானிக்கும் நபர், நிச்சயமாக, ஜெபிக்க வேண்டியது அவசியம், தேவனே, கற்றுகொள்ளும் மனமும் விருப்பமும் உள்ள நபரை என்னிடத்தில் அனுப்பும்." சீஷத்துவத்தில் அவசியமாக காணப்படும் கோட்பாடுகளில் இதுவும் ஒன்று. கற்றுகொள்ளும் மனப்பான்மை

உடைய ஒருவரோடு தான் பணியாற்ற முடியும். இந்த காரியங்களை சீஷன் என்ற வார்த்தையில் கண்டறிந்தேன்.

சுவாரஸ்யமா இருக்கு, சீஷன் என்ற வார்த்தை வேதத்தில் சுவிசேஷங்களில் 238 முறை பயன்படுத்தப்படுகிறது, புதிய ஏற்பாட்டில் மட்டும் 269 முறை பயன்படுத்தபப்டுகிறது, இதை கிறிஸ்தவர் என்ற வார்த்தையோடு, ஒப்பிட்டால், அது மூன்று முறைதான் வருகிறது. இப்ப ஜனங்களிடம் கேட்கப்படும் கேள்வி என்னன்னா, “இயேசு எதற்கு ஆர்வம் காட்டுகிறார், கிறிஸ்தவர்களா அல்லது சீஷர்களை உருவாக்குவதா?” இதற்கான பதில் சீஷர்களை உருவாக்குவது.

சீஷன் என்ற வார்த்தை சுவாரஸ்யமான ஒன்றுதான், ஏன்னா அது அப்ரண்டீஸ் என்ற வார்த்தையை குறிக்கிறது, கற்றுகொள்பவன் என்பதை குறிக்கும் சொல். வளரவேண்டும் முன்னேற வேண்டும் என்ற விருப்பமுடையவர் என்பதை குறிக்கும் வார்த்தை. அதுதான் முதல் குறிக்கோளாக இருக்கவேண்டும். ஒரு நபரிடம் கேளுங்கள், “நீ கற்றுக்கொள்ளவும் வளரவும் விரும்புகிறாயா?” இப்ப, நீங்க இதை செய்வது கிடையாது. கடினமான நிலையில் தான் நான் கற்றுகொண்டேன். நா, என்னுடைய 30 வயதுகளில், 50 அல்லது அறுபது வயது நிரம்பிய ஒருவரிடம் போய் பேசுவது எனக்கு ரொம்ப கடினமான ஒரு விஷயம் தான் அவர்களிடம் போய், “உங்களை நான் சீஷத்துவத்தில் நடத்த விரும்புகிறீர்களா என்று கேட்கலாமா? அது சரியான விதமாக இருக்க முடியாது, ஏன்னா அவங்க ஒருவேளை, “நீ, எனக்கு என்ன கற்றுகொடுக்க விரும்புகிறாய் என்பார்கள்.” இதை செய்வதற்கு ஒரு சிறந்த வழி இருக்கிறது நீங்க அவங்ககிட்ட, “இரண்டு பேரும் சேர்ந்து வேதத்தை கற்றுகொள்வதில் உங்களுக்கு ஆர்வம் இருக்கிறதா? வேதத்தை சேர்ந்து வாசித்து கற்றுகொள்வதில் ஆர்வமாக இருக்கிறீர்களா என்றிடுங்கள். ஒருவருக்கு ஒருவர் கணக்கு ஒப்புவிக்கிறவர்களாக இருப்பதில் உங்களுக்கு ஆர்வம்

இருக்கா, வசனங்களை மனப்பாடம் செய்வதும், சேர்ந்து ஜெபித்ததும் உங்களுக்கு பிடிக்குமா?" இதற்கு தங்களை திறந்துகொடுக்கும் நிறைய நபர்களை நான் பார்த்திருக்கிறேன். அவங்ககிட்ட கேட்டா போதும், அவங்க இதை செய்வதற்கு தயாராக இருப்பார்கள்.

**அன்கெர்பெர்க்:** நிறைய ஜனங்கள் இருக்காங்கள், ராபி. அதாவது, இது ரொம்ப கஷ்டம் இல்லையே. ஜனங்கள் இதை கடினம் என்று நினைக்கிறார்கள், ஆனால் எல்லா இடங்களிலும் இருக்கும் நேயர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

ஆல்ரைட். அவங்ககிட்ட நீங்கள் ஒருவேளை பேசினா, அவங்க கருத்தை சொல்லிடுவார்கள். சந்திக்க விரும்பாவிட்டாலும், அதையும் உங்களிடம் சொல்வார்கள். ஆனா சந்திக்க விருப்பமுள்ள நபர்கள் நிறைய பேர் இருக்காங்க, ஒருவரிடம் இரகசியமாக சில விஷயங்களை பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று நினைப்பார்கள், பாஸ்டராக இல்லாத ஒருவரிடம் இருந்து தேவனுடைய வார்த்தையில் இருந்து சில ஆலோசனைகளை கேட்க வேண்டும் என்று விரும்புவார்கள்.

ஒரு தலைவராக இருக்கிறவர்களிடம் அவர்கள் எப்படியாவது பேச வேண்டும் என்று விரும்புவார்கள், தேவனை அறிந்தவர்களாக இருக்கவர்களை பார்க்கிறார்கள். உங்களுக்கும் எனக்கும் ஜனங்களுக்கும் தெரியும், ஒரு குறிப்பிட்ட சில தலைவர்களிடம் ஜெபிக்கும்படி நாம அவர்களிடம் கேட்டால், அவர்கள் உண்மையாய் நமக்காக ஜெபிப்பாங்க. அதனால நீங்க என்னபண்ணுவீங்க, அதாவது, எப்பெல்லாம் கடினமான சூழ்நிலை வருகிறதோ அப்போது இவர்களை தான் தேடுவார்கள். அப்படிப்பட்ட நபர்களை நீங்கள் சந்தித்து அவர்கள் மீது ஆர்வமாக இருப்பீர்களானால், அவர்களை நீங்கள் உற்சாகப்படுத்திடுவீர்கள், அவர்கள் உங்களை பார்க்க விரும்புவார்களா? அந்த நபர்கள் நிச்சயமா

சொல்வாங்க, ஆமா.” சரி, ஒரு நபர் சரி என்று சொல்வார்களானால், உங்களை பார்த்தால் அவங்க ரொம்ப பயப்படுகிறவராக இருக்கிறார், சரியா. எங்க சந்திக்கலாம் என்று எப்படி தீர்மானிப்பீர்கள்? எப்போது நீங்கள் சந்திப்பீர்கள், பார்த்ததும் நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள்?

**ராபி கேலட்டி:** சரி, அருமையான கேள்வி. சபைக்கு வெளியில் சந்திப்பதை நான் ஊக்குவிக்கிறேன். இதை நான் சொல்வதற்கு காரணம் என்னவென்றால் இயேசு தம்முடைய சீஷர்களுக்கு போதிப்பதற்கு தேவாலயத்தை தெரிந்துகொள்ளவில்லை. அப்படி செய்திருக்கலாம் என்று நினைக்கலாம், ஒரு போதகர் தான, ஆனா அப்படி செய்யல. அவர் தமது மனுஷர்களை உலகத்திற்குள் கூட்டி சென்றார். அதனால என்னிடத்தில் சீஷத்துவத்தில் இருப்பவர்களிடம் நான், “நாம சபையில் சந்திக்கவேண்டாம். ஒரு ரெஸ்டாரன்ட்ல சந்திக்கலாம்; ஒரு ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்களில் சந்திக்கலாம்; ஜிம்ல பார்க்கலாம் ஒரு டேபிள்ள, சமூகத்தினரின் மத்தியில் சந்திக்கலாம் என்கிறேன். இதினால் என்ன நடக்கும், நம்முடைய சவுகரியமான சூழலை விட்டு வெளியில் வந்திடுவோம். அதாவது, அவங்க யோசிக்க ஆரம்பிப்பாங்க, ரெஸ்டாரன்ட்ல வேதம் வாசிப்பதில் தவறு இல்லை; போது இடங்களில் ஜெபிப்பது தவறு கிடையாது, அப்படி அவர்கள் தங்கள் சவுகரியமான நிலையில் இருந்து வெளியில் வருவார்கள்.

ஜனங்க எப்போதும் என்னிடம் கேட்ப்பாங்க, நாம எவ்வளவு நாள் இடைவெளிகளில் சந்திக்கணும்? வாரத்தில் ஒரு நாள் சந்திக்கலாமா? வாரத்தில் இரண்டு முறை சந்திக்கவேண்டுமா? நா என்ன சொல்றேன்னா – இது ரொம்ப கஷ்டமான கடினமான சட்டம் கிடையாது – ஆனா வாரத்தில் ஒருமுறையாவது சந்திக்கலாம் என்கிறேன். குறைந்த பட்சம் ஒருமுறையாவது சந்திக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதற்கு மேலையும் நீங்க சந்திக்கலாம், ஆனா வாரம்

ஒருமுறை சரியாக இருக்குமென்று நினைக்கிறேன், ஏன்னா நீங்க பேசுகிற காரியத்தை பற்றி நிதானிக்க அவர்களுக்கு நேரமும் சந்தர்ப்பமும் கிடைக்கும். சரி, என்னை எப்போதும் கூப்பிடுவாங்க, உங்களை அழைப்பதை போல தான், அதனால இது வாரம் ஒரு நாள் என்ற அர்ப்பணிப்பாக இருக்காது, எல்லா நேரமும் நீங்க அர்ப்பணிப்பின் பிடியில் இருப்பீங்க, அவங்க ஜெப உதவிக்காக உங்களை அழைப்பார்கள், வசனத்தில் உண்டாகும் கேள்விகளை பற்றி விசாரிக்க கூப்பிடுவார்கள். அதனால வாரம் ஒருமுறை சந்திக்கும் விதமாக துவங்குவது நல்லது.

**அன்கெர்பெர்க்:** சரி. நா பல்கலைகழகத்தில் இருக்கும்போது, நான் சீஷத்துவத்தில் நடத்தினவர்களோடு நேரத்தை செலவிட ஒன்றாக கூடிட சரியான நேரம் காலை ஆறு மணி என்பதை நான் தெரிந்துகொண்டேன். அங்க ஒரு ரெஸ்டாரன்ட் வைத்திருந்த நபரிடம் அங்கு பின்புறம் பயன்படுத்த படாமல் இருந்த ஒரு அறையை கேட்டேன், அவனிடம் நான், “நாங்க தினமும் இங்க வந்து காலை உணவு சாப்பிட்டால் அதுல ஏதாவது தொந்தரவு இருக்குமா, உங்களுக்கு பரவாயில்லையா என்றேன். எங்களுக்கு கொஞ்சம் தனிமையான இடம் கிடைக்குமா என்றேன்.” அதற்கு சொன்னார், பிரச்சனை இல்லை. மேலும் அவர், “பிசினஸ் நடந்தா சந்தோசம் தான் என்றார்.” அதனால, இந்த அருமையான பின்புற அறை எங்களுக்கு கிடைத்தது. நா காலையில 5 மணிக்கெல்லாம் எழுந்து அங்க ஆறு மணிக்கு போய் சேர சிக்காகோ நகரத்தின் வழிகளில் பிரயாணம் செய்வேன். அங்க நாங்க 6 மணிமுதல் 7 மணிவரை இருப்போம் அப்பறம் வகுப்புகளுக்கு சென்றிடுவோம். அப்ப, அதாவது, எழுந்திருப்பது கடினமாக தான் இருக்கும். ஆனா ஒன்று மட்டும் சொல்லுவேன், அவர்களுடனான அந்த நேரம், அதாவது – வாரத்திற்கு மூன்று அல்லது அதற்கு அதிகமான முறை சிந்திப்போம் –

அது எங்கள் எல்லாருடைய வாழ்விலும் முக்கியமான காலம், தேவனுக்குள் நாங்கள் வளர்ந்த நாட்கள், ஒருவருக்கொருவர் கணக்கொப்புவிப்பவராக இருந்தோம். இப்ப, அதை எப்படி ஒழுங்கு செய்திடுவீர்கள் என்பதை பற்றி பார்க்கலாமா? நேரடியா சொல்ல முடியுமா, “நா உங்களுக்கு கணக்கொப்புவிப்பவராக இருக்க விரும்புகிறேன் நீங்க என்னிடம் கணக்கொப்புவிப்பவராக இருக்கவேண்டும்.” இது எப்படி செய்யப்பட வேண்டும் செய்திடலாம்?

**ராபி கேலட்டி:** ஆமா, கணக்கொப்புவித்தல் என்பது சீஷத்துவ பாதியில் மிகப்பெரிய பங்காகும். கணக்கொப்புவித்தல் என்றால் என்ன, அதாவது, நீங்கள் மற்ற நபருக்கு உங்களிடம் சில கடினமான கேள்விகளையும் கேட்க்கும்படியான உரிமையை அளிப்பதாகும். தேவனுடனான உங்கள் அந்தரங்க வாழ்க்கையை பற்றிய கேள்விகளை ஒருவர் கேட்கும்படிக்கு உரிமை அளிபதாகும். உங்களுக்கு பாவ பழக்கம் இருக்கிறதா? உங்களுடைய திருமணத்தில் ஏதாவது பிரச்சனை இருக்கிறதா? நீ முன்னேருகிறாயா? நீ வேதத்தை வாசிக்கிறாயா? வசனங்களை மனப்பாடம் செய்கிறாயா? சீஷத்துவ பாதையில் கணக்கொப்புவித்தல் என்பது மையப்பகுதி இதயப்பகுதியாக இருக்கிறது. கணக்கொப்புவித்தல், உண்மையில் இது, சிறிய அமைப்பில் நல்லா வேலை செய்யும், ஏன்னா சிலர் கேட்ப்பாங்க, இப்ப, ஒரு குழு எவ்வளவு பெரிதாக இருக்கணும்? அது ஐந்தாக இருக்க முடியுமா, பத்து பேர் இருக்கலாமா? என்னை பொறுத்தவரைக்கும் அது நான்கு பேருக்கு அதிகமாக இருக்க கூடாது – நீங்களும் இன்னும் மூன்று பேர் அவ்வளவுதான். நீங்களும் இன்னும் இரண்டு பேர் மட்டும் இருதா கூட போதும். ஒருத்தருக்கு ஒருத்தர் என்ற நிலையை ஊக்குவிப்பது இல்லை. அதற்கு காரணம் என்னன்னா, ஒரே ஒரு நபர் மட்டும் இருக்கும் போது, சீஷரை உருவாக்கும் போது, கேள்விகள்

தொடர்ந்து வந்துட்டே இருப்பது போன்ற ஒரு உணர்வு உண்டாக வாய்ப்பிருக்கிறது, அது டென்னிஸ் விளையாட்டு போல இருக்கும். தொடர்ந்து பந்தை வளைக்கும் அந்த நபருக்கும் அடிப்பது போல இருக்கும், அவங் அதிருப்பி அடிப்பாங்க, அந்த பாலை தொடர்ந்து அடித்துகொண்டே இருக்க வேண்டும் என்ற உணர்வு உண்டாகும், அப்பதான தொடர்ந்து உரையாடல், நடந்துகொண்டே இருக்க முடியும்.

**அன்கெர்பெர்க்:** ஆமா. இன்னொரு விஷயம், ராபி, இதுல நானும் ஒன்று சொல்ல நினைக்கிறேன், ஒரு விஷயத்தை கண்டறிந்தேன் என்னன்னா இதுல நீங்க பேச ஆரம்பிக்கும்போது ஒவ்வொன்றாக, வெளியில வந்துட்டே இருக்கும்.

ஓகே. அதாவது, அதாவது வெளிப்படும் அந்த இரண்டு விஷயங்களை பற்றி பேச துவங்கிடுவோம் போயிட்டே இருக்கும், இதுல உண்மை என்னன்னா, நீங்க எதை நோக்கி போரீங்கன்றத நிர்ணயித்து செல்வது எப்படி? ஒவ்வொரு நாள் வாழ்வில் வெளிப்படும் சில காரியங்களை பற்றியும் சொல்லுங்க.

**ராபி கேலட்டி:** சரி. நா பொதுவா, என்னோட சீஷத்துவ பாதையில் இருப்பவர்களிடம் கையெழுத்து வாங்குகிறேன், வாய்மொழியாகவோ எழுத்து வடிவிலோ, ஒரு ஒப்பந்தம். நாம அப்படி செய்யவேண்டும் என்று நிச்சயமாக நம்புகிறேன். இது ஒரு பொழுது போக்கல்ல அர்ப்பணிப்பு என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும், இது ஏதோ சாதாரணமான சந்திப்பு அல்ல. இது ஒரு தீவிரமான முக்கியமான ஒன்று. தேவனுடனான நம்முடைய தனிப்பட்ட வாழ்வில் முன்னேறுகிற பயிற்சி. நம்முடைய விசுவாசத்தில் நாம் வளர போகிறோம். அதனால அவங்க முகத்தை பார்த்து பேசிடுவேன், அடுத்த பன்னிரண்டு முதல் பதினெட்டு மாதங்களுக்கு தொடர்ந்து உங்களால என்னை சந்திக்க முடியாது என்று நினைத்தால், இது உங்களுக்கு சரியான நேரம் அல்ல என்றிடுவேன். நீங்க

என்னோடு ஐக்கியபப்ட விரும்பினால், அது அடுத்த பன்னிரண்டு முதல் பதினெட்டு மாதங்களுக்கான ஒப்பந்தமாக இருக்கிறது.

அதுமட்டுமல்ல, அதற்கு பிறகு, நாங்க ஒருவரோடு ஒருவர் செலவிடபோகிற நேரத்தை தேவன் ஆசீர்வதித்து தரும்படியாக இணைந்து ஜெபித்திடுவோம். அதற்கு பிறகு இந்த சிறுகுழுவை பற்றி விளக்கம் கொடுப்பேன். நா என்ன நம்புகிறேன் தெரியுமா, ஜான், கேளுங்க. நாம வாழ்ந்துகொண்டிருக்கிற இந்த உலகத்தில் இன்று எப்படி நடக்க வேண்டும் என்று ஜனங்களிடம் சொன்னால், அதன்படி அவர்கள் நடந்திடுவார்கள். ஆனா அது வேதாகமத்திற்கு ஏற்றதாக இல்லை. தேவன் என்ன செய்தார் என்றால், என்ன நம்பவேண்டும் என்று கற்றுதந்தார், உங்கள் விசுவாசம் சரியானதாக இருந்தால், உங்கள் சுபாவம் அதை பின்பற்றிடும். வேதாகமம் முழுவதும் அப்படிதான் இருக்கிறது, பவுல் இதை குறித்து எப்போதும் பேசுகிறார். எபேசியர்களுக்கு எதை விசுவாசிக்க வேண்டும் என்று முதல் மூன்று அதிகாரங்களில் கூறுகிறார். அதற்கு பிறகு அவர் நிலைமாற்றத்தை சொல்கிறார், “நான் உங்களுக்கு இவைகளை சொல்லியிருப்பதால், இதன்படி நீங்க வாழ வேண்டும் என்கிறார்.” இதே, விஷயம் சீஷத்துவத்திற்கும் ஏற்றதாக இருக்கிறது. இதில் உபதேச சம்பந்தமானவைகளை பற்றி பேசுவோம், இறையியல் காரியங்கள் இருக்கும். இதை மட்டும் விட்டுவிட கூடாது: இந்த உபதேசங்கள் மற்றும் இறையியல் காரியங்களை பற்றி கற்றுகொள்வது உங்கள் மூளையை தகவல்களால் நிரப்புவதற்காக அல்ல. இது பண்டமாற்றம் அல்ல; இது நிலைமாற்றத்திற்கானது. எனவே, முக்கியமானது இதுதான் பாடங்களின் இறுதியில், அந்த காலத்தின் இறுதியில், சொல்லனும், “நாங்க கற்றுக்கொண்ட காரியங்கள் இப்படியிருக்க, இன்னி, இப்படிதான் வாழ வேண்டும். என்ன செய்யவேண்டும் என்று உனக்கு தெரியும் என்பதால், இப்படிதான் நீ நடக்க வேண்டும்.”

**அன்கொர்பெர்க்:** சரி, இதை பற்றியும் அந்த குழுவிற்குள் என்ன நடக்கிறது என்பதை பற்றியும் அதிகமாக தெரிந்துகொள்ள போகிறோம். என்னுடைய சொந்த அனுபவத்தில் இருந்து சொல்ல முடியும், ஜெபியுங்கள் என்று சொல்லும்போது, உங்க குழுவிற்குள் நீங்க ஜெபிப்பதோடு, ஜெபத்தை குறித்த சில கேள்விகளும் உங்களுக்கு முன் வந்திடும், இதற்காக நாம ஜெபிக்கலாமா?

நீங்க சில உண்மையான சூழ்நிலைகளை பற்றி பேசுவீர்கள், அப்படி செய்யும்போது சொந்த அனுபவத்தில் இருந்து தேவன் முழு குழுவின் ஜெபத்திற்கும் பதில் கொடுக்கிறார் என்பதை நீங்கள் கற்றுக்கொள்ள துவங்குவீர்கள். சில குறிப்பிட்ட காரியங்கள் நடப்பதை நேநேகள் காண்பீர்கள். சாட்சி சொல்ல நீங்கள் ஆரம்பிக்கும்போது, ஜனங்களை பொறுத்தவரையில், நீங்க வார்த்தையில் சொல்ல வேண்டாம், "போய் சாட்சி சொல்லுங்க." நீங்க என்ன சொல்லவேண்டும் என்றால், "இப்படிதான் செய்யவேண்டும் என்றிடுங்கள். என்னுடைய குழுவினரிடம் என்ன சொல்வாங்க தெரியுமா, "நாங்களும் உங்க கூட வருகிறோம் நீங்க செய்வதை முதல்ல நாங்க பார்க்கிறோம் என்பார்கள்.

**ராபி கேலட்டி:** அதுதான் சரி.

**அன்கொர்பெர்க்:** நான் அவங்களையும் வெளியில கூட்டீட்டு போய், அவங்ககூட போய் எப்படி செய்யணுன்னு காண்பிக்கும் வரைகும், அவர்களாலும் அது முடியும் என்பதை அவர்கள் நம்பவில்லை. அப்பறம் நா அவங்க கூட போனேன் அவங்க செயலில் இறங்கினார்கள், இப்ப, அவங்க செய்வதை நான் பார்த்தேன்.

அப்ப, அதாவது, நா பல்கலைகழகத்தில் இருக்கும்போது என்னுடைய வீட்டில் இன்னொரு தொலைபேசியை பயன்படுத்துவது வழக்கம். உண்மையில், இரண்டு தொலைபேசிகள் இருக்கு, என்னோடு தொடர்புடையவர்களில் சில குறிப்பிட்ட

பிரச்சனையோடு இருப்பவர்களுக்கு ஒன்று, அப்ப, அந்த போன் அடிக்கும்போது எனக்கு தெரியும், இங்க இருக்கிற ஜனங்கள் இந்த பிரச்சனைக்காக தான் கூப்பிடுகிறார்கள் என்று தெரியும். நா அந்த மாதிரியான காரியங்களை தான் டீல் பண்ணீட்டு இருந்தேன்.

அதை பற்றி இன்னும் பல விஷயங்களை பேச இருக்கிறோம். ஆனா இப்ப ஒரு விஷயம் தான், அதாவது, இந்த சூழ்நிலைகளில் தேவன் ஆளுகை செய்ய நீங்க அனுமதித்தால், அதை இப்போதே துவங்கினால், உங்களுக்கு மேலான சந்தோஷத்தை அளித்திடும். உங்களுக்கு அது உற்சாகமளிப்பதாக இருக்கும். வேதம் தத்ரூபமாக வருவதுபோலிருக்கும், அதை பற்றி நாம் அடுத்த வாரம் பேச இருக்கிறோம் – சீஷத்துவத்தில் வேதாகமத்தின் ஸ்தானம் எது? ஜெபம்

உயிருள்ளதாக மாறும். அதை பற்றியும் நாம் பேசிட இருக்கிறோம். உங்கள் விசுவாசத்தை நீங்கள் எப்படி பகிர்ந்துகொள்வீர்கள் என்பதை பற்றியும் நாம் பார்க்க இருக்கிறோம். நீங்க என்ன பேசுவீங்க அது எப்படி நடக்கும்? அதுமட்டுமின்றி, இதெல்லாவற்றிலும், என்ன நடக்கும். ஒருவர் பின்தங்கி நிற்கும்போது நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பதை பற்றி அடுத்த வாரம் பார்க்கலாம், ஒருவர் உங்களிடம், "அவ்வளவு தூரம் போக மனமில்லை என்று சொன்னால், நீங்கள் இப்படிபட்ட சூழ்நிலைகளில் எப்படி நடந்து கொள்வீர்கள்?

சரி, நேயர்களே நீங்கள் இயேசுவின் வார்த்தைக்கு கீழ்படிந்து நடக்க முடிவு செய்யும்போது உங்கள் பாதையில் வர இருக்கும் காரியங்களை எதிர்கொள்ளும்போது என்ன செய்வீர்கள் என்பதை பார்த்துகொண்டிருக்கிறோம், "நா ஒருவரை ஊக்குவிக்க முயன்றிடுவேன். சிலரோடு சந்திக்க நேரம் ஒதுக்கிடுவேன், வேதத்தின் படி சீஷராக்கிடுவேன், என்று சொல்லி, அவர்கள்

உங்களை பிரதிபலிக்க செய்திடுங்கள். என்றைக்காவது நிச்சயம் ஒருநாள், இதை அவர்கள் மற்றவர்களோடு செயல்படுத்துவதை காண முடியும்.

இது உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என்று நம்புகிறேன் மேலான காரியத்தை நடப்பிக்க தேவன் இதை உங்கள் வாழ்வில் பயன்படுத்திடுவார். எனவே, மறுபடியும், அடுத்த வாரம் நிகழ்ச்சிக்கு, உங்களை வரவேற்கிறேன். இரண்டாவது பகுதியை குறித்து நாம் பார்க்க இருக்கிறோம், சீஷத்துவத்தில் வேதாகமத்தின் ஸ்தானம் என்ன. தொடர்ந்து இணைந்திருங்கள்.

*********

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.